தாங்கள் எம்மைத் தொடர்புகொண்டமைக்கு நன்றி.

29.09.2023 பெற்றோர் சந்திப்பில் எட்டப்பட்ட முடிவின்படி ஆவணங்களை அனுப்புவதாகக் கூறினீர்கள். அதில் தாங்கள் உட்பட 13 பேர் கையெழுத்திட்டு (பெற்றோர்/அங்கத்தவர்கள் அன்னை பூபதி றொம்மன் வளாகம் என்று)அனுப்பப்பட்ட கடிதம் மட்டுமே கிடைத்தது.

அதில் குறிப்பிட்டுள்ள விடயங்களாவது:

பெற்றோர்குழுவினால் நிர்வாகத்தினருக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு கண்டனம் தெரிவிப்பதாகவும், தங்களுக்கு எவ்வித முன்னறிவித்தலுமின்றி நாம் தன்னிச்சையாக நடப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

1. மேற்கூறிய பெற்றோர் சந்திப்பு (29.09.2023) யாரால்? எப்போது? எந்தவகையில்? எவ்வாறு அழைப்புவிடுத்து நடாத்தப்பட்டது? இச்சந்திப்பு வேறு ஏதாவது பாடசாலையின் பெற்றோர் சந்திப்பில் கதைக்கப்பட்டதா? அல்லது றொம்மன் வளாகப் பெற்றோருக்கானதா?

2. கண்டனம் தெரிவித்த 13 பெற்றோரை விட எம்மோடு தொடர்புகொண்டு தங்கள் கருத்துகளைக் கூறிய பெற்றோரின் எண்ணிக்கை பலமடங்கு என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

எமது விளக்கம்_

கடந்த 28.09.2023 அன்று பல பெற்றோரின் கருத்துகளை உள்வாங்கி எமது கருத்துகளையும் இணைத்து எழுதப்பட்ட கடிதத்திற்கு விமர்சனங்களை(தவறான பார்வையை) ஏற்படுத்தும் வகையில் தங்களைப் போன்ற தவறான புரிதலைக் கொண்ட சிலரால் பரப்பப்பட்டு வருகின்றது.

பெற்றோர்குழுவினரால் வழங்கப்பட்ட கடிதத்தில் பெற்றோர்குழுத்தலைவர் ஒருவரின் கையெழுத்து மட்டுமே போதுமானது. இருப்பினும் எமக்குள் நாம் கலந்தாலோசித்து எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் அனுப்பப்பட்ட கடிதம் என்பதனை உறுதிப்படுத்தும் கடிதமாக அமையவேண்டும் என்பதற்காக இருவர் (பெற்றோர்குழு உபதலைவரும்) கையெழுத்திடப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

எமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்காகவும் எதிர்காலத்தினைக் கருத்திற்கொண்டும் முன்னின்று தமது நேரங்களை ஒதுக்கி நேர்மையான வழியில் பணியாற்றும் பணியாளர்களை அவதூறாகப் பேசும்போது நாம் முன் வந்து கருத்துகளைக் கூறவேண்டும் என்ற நல்நோக்கோடு நாம் எமது கருத்தினைப் பதிவுசெய்தோம். அப்படிக் கூறாமல் போனால் நாம் இவ்வாறான பொறுப்புகளில் இருப்பதில் பயனில்லை. எமது வளாகத்தில் பல ஆண்டுகாலம் ஆசிரியராகவும், கல்விப்பொறுப்பாளராகவும், தற்போது நிருவாகப்பொறுப்பாளராகவும் சிறந்தமுறையில் பணியாற்றும் எமது ஆசிரியையை இழிவான முறையில் பொதுவெளிகளில் பரப்பியதற்கு, நாம் வழங்கிய கடதத்திற்கு எல்லோரிடமிருந்தும் நேர்மறையான கருத்துகளை மட்டும் எதிர்பார்த்தோம். பலர் நேர்மறையான கருத்துகளைத் தந்தாலும் ஒருசிலர்(றொம்மன் வளாகம் இல்லாதோர் உட்பட) எதிர்மறையுடன் இருப்பதனையும் அறிகிறோம். பெற்றோர்குழுவின் பொறுப்பும் பெரும்பாலவர்களின் கருத்துகளுக்கமையவே செயற்படுவது. இதுவே ஜனநாயக முறை என்பதனை அனைவரும் அறிவோம். அவ்வழியினையே நாமும் கையாண்டோம்.

பெற்றோர்குழு, நிர்வாகப்பணியாளர்கள், நிர்வாகம் மற்றும் தனிநபர் அவதூறுகளை நேரடியாகப் பார்த்துக்கொண்டிருக்கும் பெற்றோர், இவ்வாறு அவதூறுகளைப் பரப்பும் சிலர் முன்னிலையில் தங்களின் முகங்கள் தெரியப்படுத்தப் பயந்து, எமக்கு மட்டும் தங்கள் கருத்துகளை அனுப்பியவண்ணம் உள்ளனர். அவர்களின் பெயர்களை/முகங்களை வெளிவர விருப்பமில்லை எனவும் கூறியுள்ளனர். எனவே நாம் அவர்களையும் பாதுகாத்து அவர்களின் கருத்துகளையும் உள்வாங்கியே செயற்படுகின்றோம். சான்றாக: பெற்றோர் சிலர் இணைந்து எழுதிய கடிதம் ஒன்றினை இத்துடன் இணைத்துள்ளோம்.

எமது வளாகத்தில் வளாகம் சார்ந்த செயற்பாட்டில் அல்லது எமது பிள்ளைகளுக்குத் தேவையான கல்வி சார்ந்த விடயத்தில் நாம் பிழையேதும் காணவில்லை. அதனால் நாம் எமது வளாகத்தின்/நேர்மையான பணியாளர்களின் பாதுகாப்பிற்காகப் பணிசெய்யவேண்டிய பொறுப்பு எம்மைப் போன்ற அனைவரிற்கும் உள்ளது.



Scanned with CamScanner

நிர்வாகம் என்பது நிறுவனத்தின் நன்மை தீமை அறிந்து எமக்காக எம்பிள்ளைகளுக்காக வழிநடாத்த வேண்டும் என்பதற்காக பெற்றோரால் தெரிவுசெய்யப்படும் ஒரு குழு, அவர்கள் தேவைக்கேற்ப சிலமுடிவுகளை எடுப்பார்கள். அதுபோன்றே பெற்றோர்குழுவும் பெற்றோர்களால் தெரிவான அவர்களின் பிரதிநிதி, அவர்களும் தேவைக்கேற்ப வளாக மாணவர்கள், பெற்றோர் மற்றும் நிருவாகங்களின் நன்மை கருதி முடிவெடுப்பார்கள். அதற்காகத்தான் நாம் குழுவாக இருக்கின்றோம். தனிநபர் யாரும் இங்கே முடிவெடுப்பதற்கு வாய்ப்பு இல்லை. எம்மில் தலைவரும் உபதலைவரும் பெற்றோர்குழுவின் சார்பாகக் கையெழுத்திட்டதையே சிலர் பெற்றோர்குழு தன்னிச்சையாகச் செயற்பட்டுள்ளது என்று பொது தளங்களிலும் எமக்கும் கடிதம் எழுதியுள்ளனர். அப்படியானால் தன்னிச்சையின் பொருள் புரியாமல் தான் சிலர் பல பரப்புரைகளையும் அவதூறுகளையும் பரப்புகின்றனரோ என்ற கேள்வி எமக்குள் எழுகின்றது.

கடந்த 23.09.2023 அன்று நடைபெற்ற றொம்மன் வளாகப் பெற்றோர் தகவல் சந்திப்பின் அறிக்கையை, அறிக்கை எழுதியவரோ, நிர்வாகமோ அல்லது பெற்றோர்குழுவோ வெளியிடாமல் தனிப்பட்டவர்களால் எழுதப்பட்டு வெளிவந்தது தான் தன்னிச்சைச் செயற்பாடு. அதில் கூறப்பட்ட விடயம் ஏகமனதாக றொம்மன் வளாகப் பெற்றோரின் விருப்பம்/கருத்து என்று கூறப்பட்டுள்ளது. இக்கருத்தினை எத்தனை பெற்றோரின் ஒப்புதலுடன் வெளியிட்டார்கள் என்பது வந்தவர்களையே ஆச்சரியமடைய வைத்துள்ளது.

எனவே தயவுசெய்து தவறான பரப்புரைகளையும் அவதூறுகளையும் தவிர்த்து எமது மாணவர்களின் வளர்ச்சிக்காக உழைக்கும் பணியாளர்களை அவர்களின் பணியைச் சிறந்தமுறையில் செய்ய நாம் ஒத்துழைக்காமல் விட்டாலும் இடையூறு செய்யாமல் தவிர்ப்போம்.

நாம் முன்பு வழங்கிய கடிதத்தினை இத்தாள்மூலம் உறுதிசெய்வதோடு, அனைத்து முடிவுகளும் பெற்றோர்குழுவில் பணியாற்றும் அனைவரும் இணைந்து கலந்தாலோசித்து ஏகமனதாக எடுத்த முடிவு என்பதனையும் உறுதிப்படுத்துகின்றோம்.

தங்கள் பிள்ளைகளின் தேவைக்காக அல்லது வளாகத்தின் நன்மைகருதிய தேவைக்காக எழும் கேள்விகளுக்கு மட்டுமே எம்மால் பதிலளிக்கப்படும். எம்மை நோக்கிய விமர்சனங்களுக்கு நாம் இனி பதிலளிக்கப் போவதில்லை. எமது செயற்பாட்டில் திருப்தியின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் பெற்றோர் தகவல் சந்திப்புகளில் நேரடியாகத் தெளிவுபெற்றுக்கொள்ளலாம்.

(signature)

பு. பிரபாகரன்.



Scanned with CamScanner

இக்கடிதத்தின் பிரதியினை பெற்றோர்குழு அனுப்பியதாக ஏனையபெற்றோருக்கும் தொடராக அனுப்பும்படி நிர்வாகத்திற்கும் அனுப்புகின்றோம்.

நன்றி.

இவ்வண்ணம்

பெற்றோர்குழுத் தலைவர்

பெற்றோர்குழு உபதலைவர்

பெற்றோர்குழு 2023

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - றொம்மன் வளாகம்

திகதி: 03.10.2023



Scanned with CamScanner

<u>அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் றொம்மன் வளாகப் பெற்றோர்குழுவினருக்கு எழுதிக்கொள்வது.</u>

<u>26.09.2023</u>

கடந்த 23/9-2023 நடைபெற்ற றொம்மன் வளாகப் பெற்றோர் சந்திப்பில் நிர்வாகத்தின் மேல் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளான கூட்டம் பற்றிய முன்னறிவிப்புகள் ஒழுங்காக இடம்பெறவில்லை. ஆனால் வெளியாகியிருக்கும் தகவல் றொம்மன் வளாகப் பெற்றோர் கூட்டம் இதுவரை காலமும் இல்லாத அளவிற்கு மண்டபம் நிறைந்த பெற்றோரோடு நடைபெற்றது. இத்தகவலை வழங்கியவர்களே மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டையும் முன்வைத்துள்ளனர். நாமும் பார்த்தோம் அன்றைய கூட்டத்தில் இதுவரை இல்லாத முகங்களையும் அவர்களின் கருத்துகளையும். இவ்வளவு காலமும் எமது வளாகத்தில் பிள்ளைகளின் கல்விசார்ந்த மற்றும் வளாகம் சார்ந்த முன்னேற்றங்களுக்காகப் பல கூட்டங்கள் நடாத்தப்பட்டது. ஆனால் வழமையில் மிகக் குறைந்தளவிலேயே பெற்றோரைக் காணக்கூடியதாக இருக்கும். இம்முறை நடைபெற்ற கூட்டத்தில் பல தேவையற்ற உண்மைக்குப் புறம்பான பரப்புரைகளை வழங்கி பலரை அழைத்துவந்துள்ளார்களா? என்ற எண்ணம் தோன்றுகின்றது. நிர்வாகத்தினால் போதியளவு/முன்கூட்டிய ஒழுங்கான தகவல் வழங்கவில்லை என்றால், எவ்வாறு இவ்வளவு கூட்டம்? வேடிக்கை பார்க்கச் சிலரும் அழைத்துவரப்பட்ட சிலரும் கூட்டத்திற்குப் புதியவர்கள் சிலரும் வந்தமையை அறியக்கூடியதாக இருந்தது. இதில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் அன்னையின் அங்கத்தவர்களா? என்ற கேள்வி இங்கே எழுகின்றது.

அண்மையில் சமூகவலைத்தளங்களில் வெளிவந்துகொண்டிருக்கும் உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பார்த்து நாம் இக்கடிதத்தினை எழுத முன்வந்துள்ளோம். உண்மையைக் கூறவேண்டிய பொறுப்பு பெற்றோராகிய எம் அனைவருக்கும் உண்டு.

TCCஆல் குற்றம் சாட்டப்பட்டுள்ளவை.

1.

தனிமனித அதிகாரப் போதையால் சமூகத்தில் ஏற்படுத்தப்படும் பிறழ்வுகள் மற்றும் தலைமை நிர்வாகியின் பதவிமோகமே அனைத்திற்கும் காரணம் என்ற தலைப்புகளில் தமிழ்முரசத்தால் வெளிவந்த ஒலி-ஒளி வடிவிலான விலகியவர்களின் குற்றச்சாட்டு.

2.

TCC இன் நோர்வே வாழ் மக்களுக்கான மடலிலும் கூறப்பட்ட விடயம்.

(சமூகமேம்பாட்டிற்கு அர்ப்பணிப்புடன் தொண்டாற்றிய ஆளுமையுள்ள 30 இற்கும் மேற்பட்ட சமூக செயற்பாட்டாளார்கள் விலகிச்செல்வதற்கும் காரணமாக இருந்துள்ளார்). குறிப்பு: இந்த 30 பேரின் பெயர்பட்டியல் இன்னும் வெளிவரவில்லை.

3.

13ஆண்டுகளாக அன்னை தலைமை நிர்வாகப் பொறுப்பாளரின் பதவிக்காலம் உள்ளது. மாற்றம் தேவை.

இவற்றை நாம் ஆராய்ந்து பார்த்தால்…

விலக்கிய/விலகியவர்களில் பலர் அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் கிளை வளாகங்களில் பணிபுரிந்து, புரிந்துணர்வுச்சிக்கல்களாலும் அவ்வளாகத்தில் பல தடவைகள் கட்டமைப்பின் வரம்பை மீறி செயற்பட்டவர்களாகவும் இருந்து வந்துள்ளனர். அவர்களுக்குப் பல சந்தர்ப்பங்கள் வளாகங்களால் வழங்கப்பட்டு, இறுதியில் அன்னை பூபதி தலைமை நிர்வாகத்தினரின் ஆலோசனை பெற்று அவர்களுக்கு மேலும் பல சந்தர்ப்பங்கள் வழங்கி, தவறுசெய்தவர்கள் முன்னால் ஆற்றிய பணிகளைக் கருத்திற்கொண்டு, அவர்களுக்கு அந்நிறுவனத்திலே வேறு பொறுப்புகளையும் மாற்றும் நடவடிக்கைகள் மேற்கொண்டு, இறுதியில் விலக்க, விலக வேண்டிய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் (தொய்யன் வளாகத்தின் அறிக்கையை வாசிக்கவும்). இவ்வாறான முடிவுகள் அனைத்தும் அந்தந்தக் காலப்பகுதியில் இருந்த நிர்வாகத்தின் பொறுப்பாகவே அமையும். இதனைத் தனிநபரின் முடிவாகக் கொள்வது முற்றிலும் தவறு.

இவ்வாறான பல விலகல்/விலக்கல் நிகழ்வுகள் பல தேசிய அமைப்புகளிலும் இடம்பெற்றுள்ளது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக மேற்குறிப்பிடப்பட்ட தகவல் வெளியான தமிழ்முரசம் ஊடகத்திலிருந்து பலர் விலக்கப்பட்டதனையும் விலகியதனையும் அனைவரும் அறிவோம்.

குறிப்பு: அன்னை வளாகங்களிலிருந்து அண்மையில் விலகியவர்களுள் ஒருவர் 21வருடங்களும் மற்றொருவர் 18வருடங்களும் பணியாற்றியவர்கள் என்பதும் விலகியவர்களைப் பேட்டி எடுத்தவரும் பல ஆண்டுகளாக அதே ஊடகத்தில் தலைமைப் பொறுப்பில் பணியாற்றுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏனைய நிறுவனங்களில் மட்டும் சிறப்பான முறையில் பணியாற்றினாலும் அவர்கள் குறிப்பிட்ட காலமே பணியாற்றல்வேண்டும் என்று குறிப்பிடுவது எவ்வகையில் சரியாகும்?

இவ்வாறு பெரும்பாலானாவர்கள் கிளை வளாகங்களில் செய்த நிறுவனத்திற்கு ஒவ்வாத செயல்களினாலேயே விலக்கப்பட்டனர். அதற்குரிய தகுந்த ஆவணங்களும் சான்றுகளும் அந்தந்த வளாகத்திலே தகுந்தமுறையில் கையாளப்பட்டுவருகின்றது என்ற விளக்கத்தினை அந்தந்த வளாகங்கள் நேரடியாகவும் அறிக்கைமூலமாகவும் எம் அனைவருக்கும் தெரிவிக்கும் போது, அன்னை தலைமை இணைப்பாளர் (தனிப்பட்ட நபர்) மீது கூறப்படும் குற்றச்சாட்டுகளை நாம் எவ்வாறு ஏற்பது?

ஒரு போராட்டமாக இருந்தாலும் சரி, அல்லது நிறுவனங்களாக இருந்தாலும் சரி, அதற்கென்று ஒரு கொள்கைகள், விதிமுறைகள் அதனை ஒழுங்கமைத்து கையாளும் முறை இவைகளே கடைசி வரை அந்த அமைப்பைப் பாதுகாக்கும். நீண்டகால சீர்செயற்பாடு இருக்கும். இவற்றைக் கருத்திற்கொண்டு அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் பல தமிழ்த் தேசிய நலன்விரும்பிகளுடன் இணைந்து தனக்கென்று ஒரு யாப்பு விதிமுறைகளை உருவாக்கி அதனை நடைமுறைப் படுத்தி இன்று அந்த யாப்பு விதிகளுக்கமைய நடைபெறுவதை நோர்வே நீதிமன்றமும் உறுதிசெய்துள்ளது. இவ்வாறு செயற்பட்டு வரும் இந்நிறுவனத்தில், பணியாற்றும் ஒவ்வொருவரும் அந்த யாப்பின் அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றார்கள். வளாக நிர்வாகத் தெரிவுகளை அவ்வளாகத்திலுள்ள யாப்புவிதிமுறைகளுக்கமைய நடைபெறும். அதேபோல் அன்னை பூபதி தலைமை நிர்வாகத் தெரிவுகளை அனைத்து வளாக நிர்வாக உறுப்பினர்களும் இணைந்து யாப்பு விதிமுறைகளுக்கமைய இடம்பெறும். எனவே இங்கே யாரும் தன்னிச்சையாகச் செயற்பட முடியாது என்பதை அனைவரும் நேரடியாக அறியக்கூடிய உண்மை. இதுவே ஜனனாயக முறையானது என்று சொந்த அறிவுள்ள அனைவரும் விளங்கிக்கொள்வார்கள்.

பெரும்பாலான நிர்வாக உறுப்பினர்களால் பல தடவை தற்போதுள்ள அன்னை பூபதி இணைப்பாளர் தெரிவு செய்யப்படுவதற்கான முக்கிய காரணம், அன்னை பூபதி வளாகத்தின் பெருவளர்ச்சி மற்றும் எந்த விடயமாக இருந்தாலும் நேர்முகப் பார்வையுடன் கையாள்வது, பல இளையோரை உள்வாங்கும் முயற்சியில் ஈடுபடுவது, மற்றும் தேசப்பற்றுடன் செயற்படுவது, இதனை அன்னை பூபதியில் உண்மைப் பற்றுள்ளவர்கள் அறிந்து கொள்வார்கள்.

இதனை விட நிர்வாக ஒரு தலைமைச் செயற்பாட்டாளருக்கு என்ன தகுதி தேவை?

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடத்தின் சிறந்த சேவைகளை பெற்றோராகிய நாம் என்றும் மறந்துவிடக்கூடாது.

அதில் சில…

1.

கொரோணா காலத்தில் நோர்வேஜியப் பாடசாலைகளே மூடியவேளை அன்னை பூபதி தமிழ்க்கலைக்கூடம் மட்டும் சிறந்த முறையில் இணையத்தினூடாக (Teamsஇல்) நடைபெற்றது. இதனால் எம் சமூகம் பெற்ற நன்மைகள் பல.. இச்செயலினால் நோர்வேஜிய சமுதாயம் மற்றும் அனைத்து Frivillig அமைப்பினரும் வியக்கத்தக்க வகையில் கொண்டு சென்றதை அனைவரும் நன்கு அறிவோம்.

2.

கணக்கு விடயத்திலும் பல தெளிவான முறையில் இயங்கிவரும் ஒரு சிறந்த நிறுவனம் எனவும் இந்த அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் இயங்கிவருகின்றது.

3.

எமது பிள்ளைகளின் தமிழ் வளர்ச்சியிலும் பல முன்னேற்றங்களை நாம் கண்கூடாகப் பார்க்கக் கூடியதாக உள்ளது.

4.

இன்று கூட காலத்தின் தேவை கருதி எமது மாணவர்களுக்கான உயர்கல்வித் தேர்வில் தமிழ்மொழியினை கணனியில் எடுப்பதற்கான பயிற்சிகளையும் சிறந்தமுறையில் வழிநடாத்திவருகின்றது.

இன்னும் பல… இவற்றையெல்லாம் நாம் மறந்துவிட முடியாது.

மக்களின் நம்பிக்கை அமைப்பாகச் செயற்பட்டு வந்த தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சில நிர்வாக உறுப்பினர்களின் இந்த தகுந்த ஆதாரமற்ற செயற்பாடுகளினால் மக்கள் பலருக்கும் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் மீது நம்பிக்கையின்மையையும் ஏற்படுத்தியுள்ளது. எமது எதிர்கால சந்ததியினரான பல இளம் சமுதாயத்திற்கும் மாணவர்களுக்கும் தமிழ்ச் சமுதாயம் மீது வெறுப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளது என்பதனை நாம் மனவருத்தத்துடன் தெரிவிக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்..

அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூட நிர்வாகங்களில் பணியாற்றும் பணியாளர்களை (முக்கியமாக பெண் பணியாளர்களை) மிகவும் கேவலப் படுத்தும் வகையில் குழுமங்களில் அவதூறாக எழுதியவண்ணம் இருப்பது மிகவும் இழிவான செயலாக உள்ளது. இவ்வாறான செயல்களை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். குறிப்பாக றொம்மன் வளாகப் பொறுப்பாளர் ஒரு பெண் என்றும் பாராமல் அவர் பற்றி அவதூறாக viber குழுமங்களில் எழுதி வேடிக்கை பார்த்துக்கொண்டிருப்பதைப் பார்க்க மிகவும் வேதனையாக உள்ளது. அக்குழுமங்களின் பின் நிற்பவர்கள் யார் என்பதை பலர் அறிவோம்.

இனிமேலும் இவ்வாறான குழப்பநிலையை எமது மக்கள் மத்தியில் ஏற்படுத்தி எமது சமூகத்தில் ஒரு சீர்கேடான நிலையை உருவாக்க நாம் வழிவகுக்கக் கூடாது என்பதனையும் அவர்கள் நினைத்ததைச் சாதிக்கவேண்டும் என நினைக்கும் எந்த விடயமாக இருந்தாலும் தீர விசாரித்துத் தனி நபர்களைத் தாக்கும் வகையில் உண்மைக்குப் புறம்பான வகையில் தகவல்களை வெளியிடுவதைத் தவிர்த்தும் செயற்படவேண்டுமென்றும் வலியுறுத்தவேண்டும்.

நிர்வாகங்களுக்குள் மாற்றம் ஏற்படுத்த விரும்பும்போது அந் நிறுவனங்களின் நடைமுறைவழியில் நடைமுறைப்படுத்துவதையே எம்மைப் போன்ற பல பெற்றோர் விரும்புகின்றனர்.

தயவுசெய்து தமிழ்க் கல்விக்கூடங்களை மாணவர்கள் பயன்பெறும் பாடசாலையாக மட்டும் செயற்படுத்துவோம் என்று அக்கறையோடு கேட்டுக்கொள்கின்றோம்.

எமது பெயர் வெளிவர விருப்பமில்லை, பல ஆண்டுகாலம் சிறந்த சேவைகள் செய்துகொண்டிருப்பவர்களுக்கே பாதுகாப்பில்லாத சமூகத்தில் எமது பெயரை நேரடியாகப் பயன்படுத்தப் பயமாக உள்ளது.

இதற்கு ஒரு சிறந்த நடவடிக்கையினை எமது பெற்றோர்குழு முன்னின்று செயற்படுத்துவார்கள் என நம்புகின்றோம்.

இக்கடிதத்தினை நிர்வாகத்தினருக்கும் தேவையேற்படின் ஏனைய பெற்றோருக்கும் அனுப்பிவைக்கவும்.

நன்றி.

நட்புடன்

றொம்மன் வளாகப் பெற்றோரில் சிலர்.